**செ.வெ.எண்: 420/2019** **நாள்: 5.9.2019**

## திருவண்ணாமலை மாவட்டத்தில் முதலமைச்சரின் குடிமராமத்து திட்டம் 15.09.2019-க்குள் அனைத்து பணிகளையும் முடிக்க வேண்டும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆய்வுக் கூட்டத்தில் கேட்டுக்கொண்டார்...

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (5.9.2019) அனைத்து துறைகளின் செயலாக்கம் குறித்த மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. இரத்தினசாமி, திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி. பா. ஜெயசுதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. சு. ஜானகி, திட்ட அலுவலர் மகளிர் திட்டம் திருமதி. சந்திரா, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. அனந்த் குமார், இ.ஆ.ப., துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. மந்தாகினி, அனைத்து துறைகளின் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் தலைமையில் அனைத்து அரசுத் துறைகளின் செயலாக்கம் குறித்த மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிர்வாகம், பேரூராட்சிகள் துறை, கூட்டுறவுத் துறை, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சமூக நலத் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தாட்கோ, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மாவட்ட தொழில் மையம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துறை, மின்சார வாரியம், தாட்கோ, மதிய உணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், நீர்வள ஆதாரத் துறை, ஆவின், விளையாட்டுத் துறை, சமூக பாதுகாப்பு திட்டம், மகளிர் திட்டம், வேளாண்மைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, ஆகிய அரசுத் துறைகளின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம், வளர்ச்சிப் பணிகள் குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட கண்காணிப்பு அலுவலர் பேசுகையில் ‘திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் அற்புதமான வேலைகள், பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு மாவட்ட நிர்வாகத்திற்கும், மாவட்ட ஆட்சியருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாக கடந்த ஆண்டுகளில் திருவண்ணாமலை மாவட்டடம் பல்வேறு துறைகள் முன்னேறி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது, இதனால் மத்திய, மாநில அரசுகள் அங்கீகாரம் அளித்து வருகிறார்கள். தற்போதைய சூழ்நிலையில் மாவட்டத்தில் நல்ல மழை பெய்துள்ளது. இந்த நேரத்தில் விவசாயம் மற்றம் குடிநீர் தேவைகளை, உள்ளாட்சிகள், பொதுப்பணித் துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும். மேலும், வடகிழக்கு பருவமழை வரவுள்ளதால் கொசுக்களால் ஏற்படும் நோய்களின் தாக்கதிலிருந்து பாதுகாப்பதற்கு தேவயான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சி நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டமான குடிமராத்து திட்டம் மேற்கொண்டு வரும் பொதுப்பணித் துறை - நீர்வள ஆதாரத் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அனைத்து பணிகளையும் வரும் 15.09.2019-க்குள் முடிக்க வேண்டும்’ என்றார்.

இதனை தொடர்ந்து, மாவட்ட கண்காணிப்பு அலுவலர், மாவட்ட ஆட்சியர், அரசு அலுவலர்கள் ஆகியோர் திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள், திட்டங்கள் குறித்து செய்தியாளர்களுடன் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கள ஆய்வு மேற்கொண்டார்கள்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜல் சக்தி அபியான் - நீர் மேலாண்மை இயக்கத்தின் கீழ் திறக்கப்பட்டுள்ள 'நீர் வங்கி' (Water Bank) அலுவலகம், மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி திட்டத்தின் கீழ் 2018-2019 ஆம் ஆண்டு ரூ.6.28 கோடி மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் ஒருங்கிணைந்த அலுவலக வளாக கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், வேங்கிக்கால் ஏரிக்கரையோரம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக பிரதான் மந்திரி கானிஜ் சேஷத்ரா கல்யாண் யோஜனா மாவட்ட கனிம அடித்தள நிதி திட்டத்தின் கீழ் (PMKKKY District Mineral Foundation Fund) ரூ.78.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் 'அறிவியல் பூங்கா' கட்டுமானப் பணிகள், ஆகிய பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதனை தொடர்ந்து திருவண்ணாமலை கிரிவலப் பாதை, காஞ்சி சாலையில் நெடுஞ்சாலைத் துறை மூலமாக 55 இடங்களில் பட்டுப்போன மரங்களை மரச் சிறப்பங்களாக உருவாக்கப்பட்டு வரும் பணிகள், கிரிவலப் பாதை, ஈசான்ய லிங்கம் அருகில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் 3.35 ஏக்கர் இடத்தில் பொதுப்பணித் துறை (கட்டடம் மற்றும் பராமரிப்பு) மூலமாக ரூ.28.00 கோடி மதிப்பீட்டில் 123 அறைகளுடன், 430 நபர்கள் தங்கும் வகையில் கட்டப்பட்டு வரும் 'யாத்ரி நிவாஸ்' கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகள், நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தின் கீழ், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், தச்சம்பாட்டு ஊராட்சி ஏரியில் பொதுப்பணித் துறை - நீர்வள ஆதாரத் துறை மூலமாக ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகள், நல்லான்பிள்ளைபெற்றால் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் பெரியண்ணன் கோயில் குளம் சீரமைக்கும் பணிகள், கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீரனூர் ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் சுக்கேரிக்குட்டை குளம் சீரமைக்கும் பணிகள், குளத்தூர் ஊராட்சியில் பொதுப்பணித் துறை - நீர்வள ஆதாரத் துறை மூலமாக ரூ.29.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர், மாவட்ட ஆட்சியர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும், கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஜமீன் கூடலூர் ஊராட்சியில், தோட்டக்கலைத் துறை மூலமாக சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனம், பழச்செடி நடவு, நிழல் வலைக்குடில், கல்பந்தல், பசுமை குடியல் ஆகிய திட்டங்களின் கீழ் அரசு மானியத்தில் திரு. ஏழுமலை என்பவருக்கு சொந்தமான 4½ ஏக்கர் நிலத்தில் மூலாம்பழம், கிரினிப்பழம், தர்பூசணி ஆகிய பழங்கள் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**